**சீ.டபிள்யூ.ஈ. நிர்மாணம் மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனி - 2019**

---

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

சீ.டபிள்யூ.ஈ. நிர்மாணம் மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனியின் (கம்பனி) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தி 1.5 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2012 திசெம்பர் 17 முதல் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்காக கிடைத்த ரூபா 4,633,891 ஆன அழைப்பு வைப்பின் வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்ட | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | முன்னைய ஆண்டிற்காக கிடைத்த வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உழைப்புக்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 6,337,156 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 6,577,246 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் ரூபா 240,090 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 4,869,066 தொகை குளிரூட்டிற்கான முற்பணக் கணக்கில் பிழையாக வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் வியாபார கடன்கொடுத்தோரின் மீதி மற்றும் குளிரூட்டிற்கான முற்பணக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | செலுத்துதல்கள் உரிய கணக்குகளில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iv) | சீ டபிள்யூ ஈ 413 ஆம் இலக்க விலைப்பட்டியலின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட குளிரூட்டி இயந்திரத்திற்காக செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 334,000 கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த பட்டியல் இலக்கத்தின் கீழ் அவ்வாறான கொள்வனவொன்று மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. | -மேற்படி- | உள்ளபடியாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தியதன் பின்னர் செலுத்துதல் வேண்டும். |
| (v) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட மறை மீதியின் | -மேற்படி- | மறை மீதியாக காண்பிக்கப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதியை பகுப்பாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| காரணமாக வியாபார கடன்கொடுத்தோர் ரூபா 1,036,479 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | | செய்து நிதிக் கூற்றுக்களில் சரியான மீதி காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 தொங்கல் கணக்கு

| விடயம் | பெறுமதி | தொங்கலாக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வங்கி மீதி | 278,519 | 03 வருடங்கள் மற்றும் 08 மாதங்கள் | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பணிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | வருமானம் | 308,162,492 | பட்டியல்கள், நிர்மாண ஆவணங்கள், அளவிடைப் பத்திரங்கள் அளவிடைப் பத்திரங்கள், ஒப்பந்த உடன்படிக்கை, மற்றும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | செலவினம் | 234,998,466 | பட்டியல்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | செலுத்த வேண்டிய மீதிகள் | 274,074,671 | பட்டியல்கள், ஒப்பந்த உடன்படிக்கை | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை | | |
| (iv) | பெறவேண்டிய மீதிகள் | 258,476,325 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் பட்டியல்கள் | -மேற்படி- | -மேற்படி- |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,818,061 ஆன பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| i. | 5.1 ஆம் பிரிவு | கம்பனியால் 2012 ஆம் ஆண்டு முதல் கூட்டிணைந்த திட்டம் | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பரீட்சித்து எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 5.2.5 ஆம் பிரிவு | வருடாந்த பாதீட்டை தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| iii. | 7.4.1 ஆம் பிரிவு | கம்பனியால் கணக்காய்வு குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| iv. | 9.2 ஆம் பிரிவு | கம்பனிக்கான பதவியணியினர் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக கம்பனியால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த விளைவுகள் ரூபா 570,924 இலபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் 9,123,914 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,694,838 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தேறிய வருமானம் ரூபா 9,206,343 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.